**திட்ட ஆலோசகர்** : அவர்கள் இத்திட்டம் குறித்த விளக்கங்களை நிழற்படம் (Power Point Presentation) மூலம் பொதுமக்களுக்கு விளக்கினார்.

1. **திரு.வெங்கடேசன், பாடாலூர்**

எங்களுக்கு இந்த குவாரி வருவதால் எந்த இடையூறும் இல்லை. எங்களுடைய பிள்ளைகள் பள்ளிக்கூடத்தில் படிக்கிறார்கள். அவர்களின் கல்வி செலவுகள் உள்ளிட்ட அனைத்து தேவைகளையும் இது மூலம் பார்த்துக் கொள்ள முடிகிறது. நன்றி.

2. **திரு.குமார், பாடாலூர்**

இந்த குவாரி வருவதால் எங்களுக்கு எந்தப் பிரச்சனையும் இல்லை. பலருக்கும் வேலைவாய்ப்பு கிடைக்கிறது. பள்ளி குழந்தைகளின் கல்வி செலவுகளுக்கும் இது உதவியாக இருக்கிறது. எனவே இந்த குவாரியை நாங்கள் வரவேற்கின்றோம். நன்றி.

3. **திரு.ஆண்டிபழனமுத்து, தெரணி**

இந்த கருத்துக் கேட்பு கூட்டம் நடைபெறும் இந்த நேரத்தில், முன்மொழியப்பட்ட குவாரி என் விவசாய நிலத்திற்கு மிகவும் அருகில் இருகின்றது. இந்த குவாரி அமைக்கப்பட்டால் எங்களுக்கு மிகுந்த பாதிப்பு ஏற்படும் என்பதை தெரிவிக்கிறேன். விவசாய பணிகளை சரியாக செய்ய முடியாது, தினசரி வேலைகளும் பாதிக்கப்படும். வெடி வைக்கும் போது கற்கள் காற்றில் பறக்கின்றன. செல்லக்குறிச்சி எல்லை என்று சொன்னாலும், இது எங்கள் தரணி ஊரில் விவசாய நிலங்களின் அருகிலேயே உள்ளது. வெடி வைப்பதால் எந்தப் பணியும் செய்ய முடியாத நிலை ஏற்படுகிறது. நிலத்தடி நீர் நாளுக்கு நாள் குறைந்து வருகிறது, இறுதியில் நீரே இல்லாமல் போகும் அபாயம் உள்ளது. அப்படி ஆனால் விவசாயம் செய்ய முடியாது. ஒரு தொழிலை தொடங்குவதற்கு அனுமதி

வழங்குவதில் தவறு இல்லை. ஆனால் அதே நேரத்தில், இன்னொரு தொழில் பாதிக்கப்படாமல் இருக்க வேண்டும் என்பதே என் வேண்டுகோள். உங்களுக்கு அந்த தொழில் தேவைப்படலாம், எங்களுக்கு இந்த விவசாய தொழில் தான் வாழ்வாதாரம். எங்களின் தொழில் நாசமாகும் நிலை ஏற்பட்டுள்ளது. ஆகவே, இதை முறையாக ஆராய்ந்து, அனைத்து அம்சங்களையும் கருத்தில் கொண்டு முடிவு எடுக்குமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கின்றேன். நன்றி.

4. **திரு.சண்முகம், ஊத்தாங்கல்**

குவாரி வருவதால் எங்களுக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை. இந்த குவாரி மூலம் எங்கள் குழந்தைகளின் படிப்பு செலவுக்கு தேவையான வருமானம் கிடைக்கிறது. அதனால் எங்களுக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. குவாரி இல்லையென்றால் வேலைக்காக வெளியூருக்கு சென்று மிகவும் கஷ்டப்பட வேண்டிய நிலை ஏற்படும். உள்ளூரிலேயே வேலை வாய்ப்பு கிடைப்பதால் நாங்கள் பெருமையாக உணர்கிறோம். நன்றி.

5. **திரு.வினோத்குமார், தெரணி**

இந்த நிறுவனம் கல்குவாரி குட்டை அமைப்பதால் என்னுடைய 5 ஏக்கர் விவசாய நிலம் முழுமையாக பாதிக்கப்படும். என் நிலத்திற்கும் இவர்கள் திட்டம் அமைக்கவுள்ள இடத்திற்கும் ஒரே ஓடை இருப்பதால் கல் எடுக்கும் பணிகள் மேற்கொண்டால் நிலத்தடி நீர் வளம் கடுமையாக பாதிக்கப்படும். இதுகுறித்து நான் ஏற்கனவே இரண்டு முறை வனத்துறை அலுவலகத்தில் எழுத்து மூலமாக மனு அளித்தும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை, முறையான பதிலும் வழங்கப்படவில்லை. கடந்த 40–50 ஆண்டுகளாக விவசாயம் செய்து, ஆடு-மாடு வளர்ப்பை முழுநேர தொழிலாகக் கொண்டு வாழ்ந்து வரும் எங்களின் வாழ்வாதாரம் இந்த கல்குவாரியால் முற்றிலும் நாசமாகும். இந்த கூட்டத்திற்கு பாடாலூர் கிழக்கு கிராம மக்கள் என குறிப்பிடப்பட்டு பலர் அழைக்கப்பட்டிருந்தாலும், குவாரி அமைக்கப்படவுள்ள இடம் தரணி கிராம எல்லைக்குள் வருகிறது. ஆனால் தரணி கிராம மக்களுக்கு முறையாக தண்டோரா

போடப்படவில்லை, முழுமையான தகவலும் வழங்கப்படவில்லை, மேலும் இங்கு கருத்து தெரிவிக்க வந்துள்ள பலருக்கும் அந்த பகுதியில் விவசாய நிலம் இல்லை, ஆனால் பாதிக்கப்படுவது முழுவதும் தரணி கிராம மக்களின் விவசாய நிலங்களே ஆகும். ஏற்கனவே செயல்பட்டு வரும் கல்குவாரியால் எங்கள் வீட்டில் விரிசல்கள் ஏற்பட்டுள்ளன, கட்டிடங்கள் அதிர்வடைகின்றன, எனவே இந்த பகுதியில் மேலும் கல்குவாரி செயல்பட அனுமதி அளிக்கக் கூடாது. ஆகையால், இந்த கல்குவாரி திட்டத்தை முழுமையாக தடை செய்ய வேண்டும். எங்களுக்கு கல்குவாரி தேவையில்லை, விவசாயமே எங்களுடைய வாழ்க்கை, இந்த திட்டம் தொடர்ந்தால் பாடாலூர் பகுதியில் சாலை மறியல் உள்ளிட்ட போராட்டங்களில் ஈடுபட நேரிடும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

**6. திரு.இளையராஜா, ஊத்தாங்கல்**

இந்த கல்குவாரி வந்தால் எங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். நாங்கள் தினசரி கூலி வேலை செய்து வாழ்ந்து வருகிறோம், தற்போது வெளியூருக்கு சென்று வேலை செய்ய வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறோம். இந்த பகுதியில் குவாரி செயல்பட்டால் எங்களுக்கே அருகில் வேலை வாய்ப்பு கிடைக்கும், எங்களுக்கு சொந்தமான விவசாய நிலமும் இல்லை, இதுவே எங்களுடைய முக்கிய தொழிலாக அமையும். ஆகையால் இந்த கல்குவாரி வருவதை நாங்கள் முழுமையாக வரவேற்கின்றோம். நன்றி வணக்கம்.

**7. திரு.பாண்டி மணி, பாடாலூர்**

இந்த பகுதியில் கல்குவாரி வருவதால் எங்களின் வாழ்வாதாரம் மேம்படும், எங்கள் பிள்ளைகளின் கல்வி செலவுகளைச் சரிவர மேற்கொள்ள முடியும். ஆகையால் கல்குவாரி வருவது எங்களுக்கு மிகவும் சிறப்பாக இருக்கும். நன்றி வணக்கம்.

8. **திரு.பில்லா, தெரணி**

கொஞ்சம் எல்லாரும் அமைதியாக இருங்கள், என்னுடைய ஆதங்கத்தை தெரிவிக்க வந்திருக்கிறேன். என் காடு வெறும் 200 மீட்டர் தொலைவில் இருப்பதால் இந்த கல்குவாரியால் எங்களுக்கு மிகுந்த பாதிப்பு ஏற்படுகிறது. பலமுறை கோரிக்கை வைத்தும் எந்த நடவடிக்கையும் இல்லை. இதற்கு முன்பு இந்த குவாரியில் கட்டப்பஞ்சாயத்து, அராஜகம், லஞ்சம் போன்றவை நடந்துள்ளன. எங்களுக்கு எந்தவித நன்மையும் கிடைக்கவில்லை, எங்கள் நிலத்தில் கல் விழுகிறது என்று தெரிவித்தாலும் கவனிக்கவில்லை. தற்போது உள்ள குட்டை அனுமதிக்கப்பட்ட அளவை விட அதிக நீளம் மற்றும் அகலத்தில் உள்ளது, அதற்கு பலகை, கம்பி, வேலி போன்ற எந்த பாதுகாப்பு ஏற்பாடுகளும் இல்லை. கேள்வி கேட்டால் முறையான பதில் கிடைப்பதில்லை. முன்பு மனு கொடுத்தபோது ஆர்.ஐ நாராயணசாமி அவர்கள் "பெரிய நெட்வொர்க், இவர்களிடம் எதிர்த்து எதுவும் செய்ய முடியாது" என்று கூறி சென்றார். ஏற்கனவே எங்கள் நிலத்திலிருந்து 200 மீட்டர் தொலைவில் பள்ளம் எடுத்துள்ளனர், இப்போது என் காட்டின் பின்னாலும் அதே தொலைவில் எடுக்க திட்டமிட்டுள்ளனர், இதனால் எங்களுக்கு கடுமையான பாதிப்பு ஏற்படும். மேலும் ஒரு குட்டை அமைக்க அருகிலுள்ள ஊர் மக்களுக்கு 30 லட்சம் லஞ்சம் தருவதாக சொல்லப்பட்டுள்ளதாகவும் கேள்விப்பட்டோம், ஆனால் பக்கத்தில் வசிக்கும் எங்களிடம் எந்த அறிவிப்பும், தகவலும் வழங்கப்படவில்லை. இப்போது பொதுக்கூட்டம் நடைபெறுகிறது என்ற தகவலும் எங்களுக்கு முன்பே தெரிவிக்கப்படவில்லை. பாதிப்பு இல்லை என்று சொல்பவர்கள் அங்கு நிலமும் வீடும் இல்லாதவர்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். அங்கு அமைக்கப்பட்டுள்ள குட்டை அரசு அனுமதித்த அகலம் மற்றும் நீளத்தை தாண்டி செல்கிறது. இதை கேட்க சென்ற ஒருத்தரை இரவு 10 மணிக்கு அடித்து கொண்டிருந்தார்கள், நாங்கள் ஊரிலிருந்து சென்று தடுத்ததால்தான் அந்த குட்டை தற்காலிகமாக நிறுத்தப்பட்டது, இல்லையெனில் இதற்கு முன்பு எடுத்த ஸ்வேதா குவாரிபோல் ஆழமும் நீளமும் அதிகமாகி எங்கள் உயிருக்கும் நிலத்திற்கும் பாதுகாப்பு இல்லாத நிலை ஏற்பட்டிருக்கும். எங்கள் நிலத்தில் விவசாயம் செய்கிறோம், புழுதி அடிக்கிறது, மாடுகள்

இருக்கின்றன, எங்களுக்கு வேறு தொழில் இல்லை. 400–500 ரூபாய் கூலிக்கு தான் வேலை செய்து வாழ்கிறோம், ஆனால் அவர்கள் பணத்தோடு பணமாக லாபம் எடுத்துச் செல்கிறார்கள், எங்கள் விவசாய குடும்பம் அங்கேயே வாழ்கிறது, நாங்கள் எங்கே போவோம் என்பதையும் நீங்கள் பார்க்க வேண்டும். இந்த கூட்டம் கண்துடைப்பு கூட்டமாக நடத்தப்படாமல், ஒரு விவசாயியின் நியாயமான கோரிக்கையாக எங்களுடைய வேதனையை புரிந்து கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஒவ்வொரு முறையும் நாங்கள் மனு கொடுத்தால் நிராகரிக்கப்படுகிறோம், ஒருமுறைகூட எங்களுக்காக பேசவில்லை, எங்களை எல்லாவற்றிலும் புறக்கணிக்கிறீர்கள். நானும் என் அப்பாவும் மட்டுமே இருப்பதால் அவர்களை எதிர்க்க முடியாது என்ற காரணத்தை வைத்து எங்களை மிரட்டுகின்றனர். இதனால் எங்களுக்கு கடும் பாதிப்பு ஏற்படுகிறது, நீங்கள் நேரில் வந்து பார்த்தால் எங்கள் நிலத்தை சுற்றி குவாரிகள் சூழ்ந்திருப்பது தெரியும். இதற்கு தீர்வு காண உயர் அதிகாரிகள் தான் நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையெனில் நாங்கள் மீண்டும் மனு கொடுத்து உங்களிடமே வந்து கேட்போம், நீங்கள் தான் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும், நன்றி.

9. **திரு.சக்திவேல், ஊத்தாங்கல்**

இப்பொழுது வந்த அனைவரும் அந்த குட்டை வேண்டாம் என்று சொன்னார்கள். சார் காட்டிய அந்த வரைபடத்தை பக்கத்தில் பார்த்தால் ஸ்வேதா, ராமஜெயம் கிரஷர், ஹாலோ பிளாக் ஆகியவற்றிற்கு அடுத்ததாக தான் இந்த கல்குவாரி அமைக்கப்பட இருக்கிறது, பக்கத்தில் நிலங்கள் இருப்பதால் எங்களுக்கு பாதிப்பு ஏற்படும் என்று தம்பி ஒருவர் பேசினார், அது தவறான பேச்சு இல்லை என்றாலும் அவருடைய நிலத்துக்கும் இந்த குவாரிக்கும் இடையில் 500 மீட்டர் தொலைவு உள்ளது, அப்படி இருக்கும் போது பாதிப்பு ஏற்படுகிறது என்று எதிராக பேசுவது சரி இல்லை. இப்போது நாங்கள் ஊத்தாங்கல் பகுதியில் 100 குடும்பங்கள் வாழ்கிறோம், இந்த கம்பெனியை நம்பித்தான் எங்கள் வாழ்வாதாரம் உள்ளது. இந்த குவாரி அமையவில்லை என்றால் அந்த 100 குடும்பங்களும் பாதிக்கப்படும், அதனால் இதற்கு என்ன

தீர்வு என்பதை அதிகாரிகள் சரியாக ஆய்ந்து முடிவு எடுக்க வேண்டும், எனக்கு தனிப்பட்ட முறையில் இந்த குவாரி கண்டிப்பாக அமைய வேண்டும், நன்றி.

10. **திரு.மகாமணி, பாடாலூர்**

கல்குவாரி வருவதால் எங்களுக்கு மிகுந்த சந்தோஷம், ஏனெனில் இதன் மூலம் அனைவருக்கும் வேலை வாய்ப்பு கிடைக்கும், வண்டிகள் ஓடும், உள்ளூர் மக்களின் வாழ்வாதாரம் மேம்படும். ஆகவே இந்த திட்டத்திற்கு அனைவரும் ஆதரவு வழங்குமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கின்றேன், நன்றி வணக்கம்.

11. **திரு.சீனிவாசன், ஊத்தாங்கல்**

இந்த கல்குவாரி வந்ததால் எனக்கு வேலை கிடைக்கிறது. நான் ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறேன், இந்த குவாரி செயல்பட்டால் எனக்கு தொடர்ந்து வேலை வாய்ப்பு கிடைக்கும், அதனால் தயவுசெய்து இந்த கல்குவாரியை அமைத்துக் கொடுக்குமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கின்றேன், நன்றி வணக்கம்.

12. **திரு.கணேசன், ஊத்தாங்கல்**

கல்குவாரி வருவதால் எங்களுக்கு எந்த இடையூறும் இல்லை, இதன் மூலம் பல குடும்பங்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் பயன்பெறுகின்றோம். பக்கத்தில் உள்ள சில விவசாயிகள் தங்களின் ஆதங்கத்தை தெரிவிப்பது புரிந்துகொள்ளத்தக்கதே ஆனாலும் எங்களுக்கு விவசாய நிலம் எதுவும் இல்லாததால் தொழில் செய்ய கல்குவாரி தான் ஒரே வாழ்வாதாரம், அதனை வைத்து தான் குடும்பத்தை நடத்தி பிள்ளைகளின் கல்வியை முன்னேற்ற முடிகிறது, ஆகவே உயரதிகாரிகள் அனைவரின் கருத்துகளையும் சமநிலையாக சிந்தித்து எங்களுக்கு நீதியான தீர்வு வழங்குமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கின்றோம், நன்றி வணக்கம்.

13. திரு.குமரேசன், ஊத்தாங்கல்

அனைவருக்கும் வணக்கம், நீங்கள் எல்லாம் குவாரி வேண்டாம் என்று சொல்லிக் கொண்டிருக்கிறீர்கள், ஆனால் இந்த குவாரியை நம்பிதான் எங்கள் வாழ்க்கை இருக்கிறது. ஜல்லி உடைப்பதும் கல் உடைப்பதும் எங்கள் குலத் தொழில். அதே தொழிலால் தான் என் அம்மா என்னை படிக்க வைத்தார், என் அப்பா காலத்திலிருந்தே கடப்பாரை குத்தி கல்லுடைத்து குடும்பத்தை நடத்தி என்னை வளர்த்தார். அந்த தொழில் இப்போது கொஞ்சம் கொஞ்சமாக மறைந்து வருகிறது. குலத்தொழில் இப்போது இல்லாமல் போய்விட்டது. இன்றைக்கு படித்தவர்கள் இங்கு வேலை செய்வது இல்லை, படிக்காதவர்கள் முன்னேறி டிரைவர்களாக இருக்கிறோம். வெளிமாநிலங்களுக்கு சென்று ஓட்ட முடியாத நிலை உள்ளது. அங்கே RTO பிரச்சனை, காவல்துறை பிரச்சனை, மொழி பிரச்சனை காரணமாக அடித்து துன்புறுத்துகிறார்கள். அதனால் உள்ளூரிலேயே வேலை பார்க்கலாம் என்று நினைத்தால் இங்கும் வேண்டாம் என்று சொல்கிறார்கள். நாங்கள் குவாரிக்கு பக்கத்தில் இருப்பதால் காலையில் குவாரிக்கு சென்று, வீட்டில் சாப்பிட்டு, சாயங்காலம் வீட்டிற்கு திரும்பி எங்கள் குழந்தைகளை பார்த்துக் கொண்டு சந்தோஷமாக வாழ்ந்து வருவோம். பொதுவாகவே டிரைவர்களுக்கு மரியாதை கொடுப்பதில்லை, ரோட்டில் வேகமாக ஓட்டுகிறார்கள், திமிராக ஓட்டுகிறார்கள் என்று குற்றம் சொல்கிறார்கள், அதிலும் குறிப்பாக லாரி ஓட்டுநர்களை யாரும் மதிப்பதில்லை. இதனால் வெளியூர் செல்லாமல் உள்ளூரிலேயே ஓட்டிக் கொண்டிருக்கலாம் என்று நாங்கள் வேலை செய்து வருகிறோம். இந்த குவாரி இருப்பதால்தான் இங்கே லாரி ஓட்டி தினசரி கூலி பெற்று வாழ்க்கை நடத்த முடிகிறது. இந்த குவாரி வந்தால் நாங்கள் உள்ளூரிலேயே வேலை செய்து மனைவி, குழந்தைகளுடன் சந்தோஷமாக வாழ முடியும். விவசாயம் பாதிக்கக் கூடாது என்ற எண்ணம் எங்களுக்கும் இருக்கிறது, பாதிப்பு வராத வகையில் அனைத்தையும் முறையாக பார்த்து செய்ய முடியும். பக்கத்திலேயே இல்லை, 500 மீட்டர் தொலைவில் தான் உள்ளது என்று சொல்கிறார்கள் அல்லவா, வெடி வைப்பதிலும் அனுமதிக்கப்பட்ட அளவுக்குள், பாதுகாப்பாகவே செய்யப்படும். இந்த தொழிலை விட்டால் எங்களுக்கு வேறு எந்த வழியும் தெரியவில்லை. ஆகவே எங்களின்

பிழைப்பிற்காக இந்த குவாரியை திறந்து நடத்த அனுமதி வழங்குமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கின்றேன். நன்றி வணக்கம்.

**14. திரு.பசுபதி, பாடாலூர்**

இந்த குவாரி வருவதால் கல்லுடைக்கும் தொழிலாளர்கள் மற்றும் ஓட்டுநர்கள் என பலருக்கு நேரடியாக பயன் கிடைக்கும். இதுவரை இங்கிருந்து பெரம்பலூர், கல்பாளையம் போன்ற இடங்களுக்கு சென்று பெரும் சிரமத்துடன் வேலை செய்து வந்தவர்கள், இந்த குவாரி தொடங்கினால் உள்ளூரிலேயே வேலை வாய்ப்பு பெற்று வாழ முடியும், வண்டி வைத்திருப்பவர்களுக்கும் நல்ல வருமானம் கிடைக்கும். குவாரி உரிமையாளர்கள் கூறுவது போல விவசாயத்திற்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாத வகையில் தேவையான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு முறையாக செயல்படுத்தினால், அனைவருக்கும் பயனளிக்கும் வகையில் இந்த குவாரியை சிறப்பாக நடத்த முடியும் என்று நம்புகிறேன். நன்றி வணக்கம்.

**15. திரு.செந்தூரப்பாண்டியன், ஊத்தாங்கல்**

இந்த குவாரி வருவதில் எங்களுக்கு எந்தவித இடையூறும் இல்லை, மாறாக இது எங்களுக்கு பயனுள்ளதாக இருகின்றது என்று நான் தெரிவித்துக் கொள்கின்றேன். நன்றி.

**16. திருமதி. லதா, ஊத்தாங்கல்**

எங்களுக்கு இந்த குவாரி வருவதில் மிகவும் சந்தோஷம், ஏனெனில் எங்களுடைய தொழிலே இதுதான். இதை நம்பித்தான் நாங்கள் சம்பாதித்து குடும்பத்தை நடத்துகிறோம், எங்கள் பிள்ளைகளையும் படிக்க வைக்கிறோம், வண்டிகளையும் இதை வைத்தே ஓட்டுகிறோம். எங்களுக்கு வேறு எந்த வாய்ப்பும் இல்லை. இந்த குவாரியை நம்பித்தான் எங்கள் பிழைப்பு நடைபெறுகிறது. அதனால் இந்த குவாரி வருவது எங்களுக்கு மிகவும் அவசியமும் மகிழ்ச்சியும் அளிக்கிறது. நன்றி.

17. திருமதி. பிரபாவதி, ஊத்தாங்கல்

இந்த குவாரி வருவதால்தான் எங்களுடைய வாழ்வாதாரமும் பொருளாதாரமும் முழுமையாக இதை நம்பியே இருக்கின்றது. கிட்டத்தட்ட மாமனார் காலத்திலிருந்து இந்த குவாரியை நம்பி கல்லுடைக்கும் தொழில் செய்து வருகிறோம். எங்களுடைய பிள்ளைகளின் கல்வியும் எதிர்காலமும் இதையே சார்ந்துதான் இருக்கிறது. ஆகவே இந்த குவாரி எங்களுக்கு மிகவும் அவசியமானது; இது தொடர்ந்து இயங்க வேண்டும் என்று பணிவுடன் கேட்டுக் கொள்கின்றேன். நன்றி.

18. திரு.சதீஷ், சுற்றுச்சூழல் ஆர்வலர்

இந்த சபைக்கு எனது வணக்கம். இங்கு வந்திருக்கும் அனைவருக்கும் என் பணிவான வணக்கம். உங்கள் கலாச்சாரம் மற்றும் சம்பிரதாயங்களை காப்பாற்றிக் கொண்டு வாழும் உங்கள் மனோபாவங்களை நான் முழுமையாக மதிக்கிறேன். உங்கள் அபிப்பிராயங்களையும், நீங்கள் முன்வைக்கும் நியாயமான பிரச்சனைகளையும் நான் ஏற்றுக் கொண்டு, உங்களுடன் ஒருமனதாக இணங்குகிறேன். உங்கள் பிரச்சனைகள் உடனடியாக தீர்க்கப்படும் வகையில், அரசாங்கம் இந்த ஊருக்கு நிலையான வளர்ச்சியை உருவாக்க அதிகமான நிதியை ஒதுக்க வேண்டும். வேலை வாய்ப்புகளை உடனடியாக ஏற்பாடு செய்ய வேண்டும். ஏழை எளிய மக்களுக்கு நிரந்தர வீடுகளை வழங்க வேண்டும் என்பதையும் அரசாங்கத்தின் உயர்நிலை அதிகாரிகளிடம் மிகுந்த தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த ஊர் சுற்றுச்சூழலும் பசுமையும் காக்கப்பட்டு நிலையாக இருக்க வேண்டும் என்பதே எங்களின் முக்கிய கோரிக்கை. சுற்றுச்சூழலை பாதுகாக்க வேண்டிய பொறுப்புடன் அரசு செயல்பட வேண்டும் என்று பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். அதேபோல், இந்த ஊர் செழிக்க வேண்டும் என்பதற்காக குவாரி உரிமையாளர் அவர்கள் மரங்கள் வளர்க்க வேண்டும். மரங்களை வளர்த்துக் கொண்டு, அவற்றை பாதுகாக்க வேண்டும் என்பதையும் கேட்டுக் கொள்கிறேன். இந்த குவாரி உரிமையாளர் அவர்களுக்கு தடைகள் இன்றி, விதிமுறைகளுக்கு உட்பட்டு சுற்றுச்சூழல் அனுமதி

உடனடியாக வழங்கப்பட வேண்டும் என்று அரசாங்க உயர்நிலை அதிகாரிகளிடம் மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன். நன்றி வணக்கம்.

19. திருமதி.சந்திரா, NGO

இந்த குவாரி வருவதால் எங்களுக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. நாங்கள் வண்டி ஓட்டி வாழ்ந்து கொண்டிருக்கிறோம், எங்களுடைய வாழ்வாதாரத்திற்கு இந்த குவாரி மிகவும் அவசியமானது.

20. திரு. ராமச்சந்திரன், NGO

மதிப்பிற்குரிய அதிகாரிகளுக்கும் குவாரி உரிமையாளர்களுக்கும் என் வணக்கமும் வாழ்த்துகளும். மக்களின் வாழ்க்கை மேம்படவும் அரசுக்கு வருமானம் வரவும் தொழில்கள் வருவது அவசியம் என்பதைக் கருத்தில் கொண்டு இந்த கிராமத்திலிருந்து பலர் தங்கள் கருத்துகளை தெரிவித்துள்ளனர். கிராம மக்களின் பிரச்சனைகளை கேட்டறிந்து அவற்றை சரி செய்து குவாரி நடத்த வேண்டும். குவாரி வருவதால் சாலைகள், கட்டிடங்கள் போன்ற அடிப்படை வளர்ச்சிப் பணிகள் சாத்தியமாகும். கல் இல்லாமல் எந்த கட்டிடமும் கட்ட முடியாது என்பதால் இந்த குவாரி மிகவும் தேவையானது. டிகிரி படித்தவர்களுக்கு வேலை கிடைக்காத நிலையில், குவாரி ஏழை மக்களின் கை கஷ்டத்தை போக்கி வேலை வாய்ப்புகளை உருவாக்கும். குறிப்பாக கிராமங்களில் உள்ள கூலி மற்றும் கைவேலை தொழிலாளர்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும். குவாரி தொடங்கும்போது அதிகளவில் மரங்கள் நட வேண்டும், அதனால் தூசி பரவலும் குறையும். மொத்தத்தில் இந்த குவாரி வருவது நமக்கு நன்மையே. இது அரசுக்கு வருமானமும் மக்களுக்கு வாழ்வாதாரமும் தரும். தற்போதும் வருங்காலத்திலும் தேவையான இந்த குவாரிக்கு அனைவரும் ஆதரவு அளிக்க வேண்டும். நன்றி, வணக்கம்.

21. திரு.ரா.வெங்கடேசன், தெரணி

இந்த குவாரியால் பலருக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். சில பாதிப்புகள் இருக்கலாம் என்றாலும், அதிகமான மக்களுக்கு வாழ்வாதாரம் கிடைப்பதால் இந்த குவாரி அவசியம். பாதிப்புகள் ஏற்படாமல் இதை எவ்வாறு சிறப்பாக செயல்படுத்துவது என்பதை அதிகாரிகள் உரிய முறையில் தீர்மானிக்க வேண்டும். ஓட்டுநர்கள், ஆபரேட்டர்கள் உள்ளிட்ட பலர் இந்த குவாரியை நம்பியே வாழ்ந்து வருகின்றனர். ஆகவே நல்ல, சமநிலையான முடிவை எடுத்து குவாரி செயல்பட வழிவகை . செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். குவாரி வருவதில் எங்களுக்கு எந்தப் பிரச்சனையும் இல்லை. நன்றி.

22. திரு.ச.முருகேசன், தெரணி

இந்த குவாரி அமைக்கப்பட உள்ள இடத்திற்கு என் சர்வே நம்பரும் பக்கத்தில்தான் உள்ளது. குவாரி வருவது 124/1 & 1A எனும் சர்வே எண்ணில், எனது சப் ரெஜிஸ்டர் நம்பர் 129/5, 6, 7, 8, 9 ஆகும். நான் குவாரி எடுக்க வேண்டாம் என்று சொல்லவில்லை, பாதிப்பில்லாமல் எடுத்தால் எந்த எதிர்ப்பும் இல்லை. அருகில் இருப்பவர்களுக்கு இடையூறு இல்லாமல் குவாரி நடத்தினால் நான் முழுமையாக ஆதரவு கிடைக்கும். நானும் கல் சார்ந்த தொழிலை நம்பியே வண்டி ஓட்டி வாழ்ந்து வருகிறேன், ஏற்கனவே என் நிலத்தை சுற்றி பத்து குவாரிகள் உள்ளன, அதனால் கிணற்றில் தண்ணீர் போகாத நிலை இதுவரை இல்லை. இந்த குவாரி மட்டும் வந்தால் பாதிப்பு வரும் என்பது ஏற்றுக்கொள்ள முடியாதது. பல ஆண்டுகளாக குவாரிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டு வருகிற நிலையில், இதற்கு மட்டும் ஏன் இவ்வளவு எதிர்ப்பு என்பது புரியவில்லை. எனது சப் ரெஜிஸ்டர் நம்பர் 127/7A-ல் உள்ள என் கிணறும், அவர்கள் குவாரி அமைக்கும் 124/1 இடமும் 100 அடி தூரம் கூட இல்லை. எனக்கே பாதிப்பு இல்லாத போது, மற்றவர்களுக்கு பாதிப்பு வரும் என கூறுவது சரியானதல்ல. எனவே, விதிமுறைகளுக்கு உட்பட்டு பாதுகாப்பாக குவாரி நடத்தினால் எனக்கு எந்த எதிர்ப்பும் இல்லை. நன்றி வணக்கம்.

**23. திரு.கார்மேகம், ஊத்தாங்கல்**

எங்களுக்கு கல் உடைக்கும் தொழில்தான் வாழ்வாதாரம். குவாரி இருப்பதால் எங்களுக்கு எந்த விதமான பாதிப்பும் இல்லை. இதனால் எங்கள் தொழிலும் குடும்பங்களின் வாழ்க்கையும் நிலைத்திருக்கிறது. ஆகையால் இந்த குவாரிக்கு அனுமதி வழங்குமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம். நன்றி.

**24. திரு.தமிழரசன், ஊத்தாங்கல்**

நான் குவாரியில் ஆபரேட்டராக பணிபுரிகின்றேன் எனக்கு இந்த குவாரி கண்டிப்பாக வேண்டும் நன்றி வணக்கம்.

**25. திரு.பெரியசாமி, ஊத்தாங்கல்**

எனக்கு இந்த கல்குவாரி தான் என்னுடைய வாழ்வாதார தொழில். எனவே தயவு செய்து இந்த கல்குவாரியை ஏற்படுத்தி அனுமதி வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**26. திரு.நாகராஜன், திருவளக்குறிச்சி**

மாவட்ட ஆட்சியர் அவர்களிடம் எங்களின் கோரிக்கை என்னவெனில், இப்போது திரையில் காண்பிக்கப்பட்ட அனைத்து தகவல்களையும் மீண்டும் தெளிவாக வெளிப்படுத்த வேண்டும் என்பதாகும். மேலும், இந்த திட்டத்தில் பயன்படுத்தப்பட உள்ள செயல்முறைகள் மற்றும் உபகரணங்கள் குறித்து பொதுமக்களுக்கு முழுமையான புரிதல் ஏற்படுமாறு அவற்றை எழுத்துப் பிரதியாக தயாரித்து அனைவருக்கும் வழங்கியிருக்க வேண்டியது அவசியம், ஏனெனில் இங்கு காண்பிக்கப்பட்ட விவரங்கள் இறுதியில் அமர்ந்திருந்த பலருக்கும் தெளிவாகத் தெரியவில்லை, தகவல் அறியாமல் ஒரு திட்டத்தை முன்வைத்து கருத்துக் கேட்பு கூட்டம் நடத்தப்பட்டால் பொதுமக்கள் தங்கள் கருத்துகளை எவ்வாறு முன்வைப்பார்கள் என்பதும் கேள்விக்குறியாக உள்ளது. மேலும், இந்த திட்டத்தின் பாதிப்பு பாடாலூர் கிழக்கு மட்டுமல்லாமல் திருவளக்குறிச்சி,

பாடலூர் மேற்கு உள்ளிட்ட பகுதிகளுக்கும் பொருந்தக்கூடும் என்பதால், நீர் வள பாதுகாப்பு மற்றும் மாசு கட்டுப்பாடு போன்றவை ஒருவருக்கோ ஒரு நிறுவனத்திற்கோ மட்டுமல்லாது அனைவருக்கும் பொதுவானவை. மேலும் நிழற்படம் தெளிவாக இல்லை என்பதால், இந்த விவரங்களை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் வாட்ஸ் அப் எண்ணிலோ அல்லது அரசு இணையதளத்திலோ பதிவேற்றம் செய்யுமாறும், அதனை பொதுமக்கள் படித்து தெளிவாக அறிந்து கொண்டு தங்கள் கருத்துகளை தெரிவிக்க ஏற்பாடு செய்ய வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கிறேன். விவரங்கள் தற்போது தெரிவித்தமாறு முன்னதே ஊர் மக்களுக்கு தெரிவித்திருந்தால் கூடுதலாக மக்கள் கலந்து கொண்டிருப்பார்கள். குவாரி கருத்து கேட்பு விவரங்களை வாட்ஸ் ஆப்பில் அனுப்புமாறும் , படித்துவிட்டு நான் கடிதம் தனிப்பட்ட முறையில் சமர்ப்பிப்பேன் என்று தெரிவித்தார்.

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்:**

இந்த குவாரி திட்டம் தொடர்பான அறிவிப்புகள் 30 நாட்களுக்கு முன்பே வெளியிடப்பட்டதாகவும், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் இணையதளத்தில் இதற்கான முழு விவரங்கள் தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்பட்டுள்ளன என்றும், மேலும் திட்ட அறிக்கையின் அச்சுப் பிரதிகள் அலுவலகத்தில் வைத்திருந்து தேவையானவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும், இதனைத் தொடர்ந்து மீண்டும் ஒளிபரப்ப வேண்டும் எனக் கோரப்பட்டால் அதற்கும் தயார் நிலையில் இருப்பதாக மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் தெரிவித்தார்.

இதற்கு பதிலளித்து திரு.நாகராஜன் அவர் பேசியதாவது:

நீங்கள் கருத்துக் கேட்பதற்காக போஸ்டர் ஒட்டியுள்ளதாக தெரிவித்தாலும், அது எங்கள் ஊரில் ஒட்டப்படவில்லை என்பதால் நான் அதை கவனிக்கவில்லை. ஸ்ரீவாரி ப்ளூ மெட்டல்ஸ் சார்பில் ஒட்டப்பட்ட அறிவிப்பை மட்டும் பார்த்தேன், ஆனால் பாலாஜி அவர்கள் சார்பில் எந்த அறிவிப்பும்

ஒட்டப்படவில்லை. எனவே தயவுசெய்து இந்த தகவல்களை வாட்ஸ்அப் குழுவில் பகிர்ந்து விடுங்கள். அதைப் பார்த்து முழுமையாக அறிந்து கொண்டு அதன் பின்னர் நாங்கள் கருத்து தெரிவிக்க முடியும். நீங்கள் ஏற்கனவே பல அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளதாக கூறுகிறீர்கள், ஆனால் அது எங்களுக்கு தெரியாத நிலையில் உள்ளது. அந்த விவரங்கள் தெரிந்தால்தான் நாங்கள் உங்களிடம் வந்து தேவையான விளக்கங்களை கேட்க முடியும். மேலும், பொதுமக்களிடம் எவ்வளவு ஆழம் வரை கல் எடுக்கப்பட உள்ளது என்பதை தெளிவாக தெரிவிக்க வேண்டும். அந்த ஆழத்தில் நிலத்தடி நீர் பாதுகாப்பாக உள்ளதா என்பதை ஆய்வு செய்துள்ளார்களா என்பது எங்களுக்கு தெரியவில்லை என்றாலும், அந்த தகவல்கள் வழங்கப்பட்டால் பொதுமக்கள் தங்களாக முன்வந்து ஆய்வு செய்து புரிந்து கொள்வார்கள். நீங்கள் அனுமதித்துள்ள 40 அடி ஆழம் வரை எடுப்பதில் பாதிப்பு இல்லை, பக்கத்து நில உரிமையாளர் கூறியது சரியானதே அதனை நான் ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் அவருக்கு உண்மையில் 40 அடி வரை மட்டுமே அனுமதி வழங்கப்பட்டுள்ளதா என்ற விவரம் தெரியாது. மொத்தமாக இந்த குவாரி தொடர்பான விவரங்கள் எங்களுக்கு தெளிவாக இல்லாத நிலையில் இருப்பதால், அவற்றை முறையாகவும் வெளிப்படையாகவும் விளக்கி வழங்குமாறு கேட்டுக் கொண்டு, நன்றி வணக்கம்.

**துணை ஆட்சியர்:**

துணை ஆட்சியர் அவர்கள் அனைவரையும் சிறிது அமைதியாக இருக்குமாறு கேட்டுக் கொண்டு, கடந்த ஒரு மணி நேரத்திற்கும் மேலாக பல்வேறு தரப்பினரிடமிருந்து கருத்துகள் பெறப்பட்டுள்ளன என்று தெரிவித்தார். சிலர் குவாரி செயல்பாட்டால் விவசாய நிலங்கள் பாதிக்கப்படும் எனவும், சிலர் சுற்றுச்சூழல் மாசுபாடு ஏற்படும் எனவும் கருத்து தெரிவித்துள்ளனர். அதே நேரத்தில், பலர் இது தங்களின் வாழ்வாதாரமாகவும் தொழிலாகவும் இருப்பதால் குவாரி செயல்பாடு தொடர வேண்டும் என்றும், ஓட்டுநர் உள்ளிட்ட பணிகளில் ஈடுபட்டு வரும் தங்களுக்கு வேலைவாய்ப்பு அவசியம் என்றும் கூறியுள்ளனர். இதுவரை சுமார் 40 பேர் எழுத்து மூலமாக தங்களின் கருத்துகளை பதிவு செய்துள்ளனர் என்றும், இனிமேலும் யாருக்காவது

கருத்து தெரிவிக்க விருப்பம் இருந்தால் உடனடியாக தங்களின் பெயரை பதிவு செய்து கருத்துகளை தெரிவிக்கலாம் என்றும், இல்லையெனில் இத்துடன் கருத்துக் கேட்பு கூட்டத்தை முடித்துக் கொள்ளலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

**27. திரு.பார்த்திபன், பாடாலூர்**

நான் ஒரு ஓட்டுநர். தற்போது வெளியூரில் வேலை செய்து என் மனைவி மற்றும் குழந்தைகளை பிரிந்து வாழ்ந்து வருகிறேன். மாதம் நாற்பதாயிரம் ரூபாய் சம்பாதித்தாலும் குடும்பத்தை விட்டு தூரத்தில் இருப்பது எனக்கு திருப்தியில்லை. இந்த குவாரி எங்கள் ஊரில் அமைந்தால் உள்ளூரிலேயே வேலை கிடைத்து என் குடும்பத்துடன் சந்தோஷமாக வாழ முடியும். அதனால் இந்த குவாரி அமைவது எங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியை தருகிறது. இதற்கு தடை விதிக்கப்பட்டால் அது எங்கள் குடும்பத்தையும் வாழ்வாதாரத்தையும் நேரடியாக பாதிக்கும். சுற்றுச்சூழல் பாதிப்பு குறித்து பேசப்படுகின்றது, ஆனால் இதுபோன்ற பல குவாரிகள் ஏற்கனவே இயங்கி வருகின்றன. சுற்றுச்சூழல் பாதிப்பு என்ற காரணத்தால் அனைத்துக் குவாரிகளையும் மூட முடியாது, அதுபோல் இந்த ஒரு குவாரி தொடங்குவதால் மட்டும் பெரிய பாதிப்பு ஏற்படும் என்று கூறி தடை விதிப்பது நியாயமல்ல. கிராம மக்களின் வாழ்வாதாரம் மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்காக இந்த குவாரி அவசியம் என நான் கருதுகிறேன். நன்றி.

**28. திருமதி.ரேவதி, பாடாலூர்**

இந்த கல்குவாரியை நம்பி பல குடும்பங்கள் வாழ்ந்து வருகின்றன. வேலை வாய்ப்பு இல்லாமல் சிரமப்படும் எத்தனையோ மக்களுக்கு இந்த கல்குவாரி நேரடி மற்றும் மறைமுகமாக வேலை வாய்ப்பை வழங்குகிறது. எனவே அனைவரும் இதை கருத்தில் கொண்டு இந்த கல்குவாரிக்கு தங்களுடைய ஆதரவை தெரிவிக்க வேண்டும் என்று பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

29. **திருமதி.பார்வதி**, பாடாலூர்

என் கணவர் டிரைவராக வேலை செய்து வருகிறார். இந்த கல்குவாரி இயங்குவதால் எங்களுக்கு நிலையான வேலைவும் வாழ்வாதாரமும் கிடைக்கிறது. எனவே இந்த கல்குவாரி எங்கள் குடும்பத்திற்கு மிகவும் அவசியமானது. நன்றி, வணக்கம்.

30. **திரு.குமரேசன்**, பாடாலூர்

வெளியூர் சென்று வண்டி ஓட்ட வேண்டிய அவசியம் இல்லாமல், உள்ளூரிலேயே வண்டி ஓட்டி வேலை செய்து வீட்டிற்கு திரும்ப முடிகிறது. இந்த கல்குவாரி செயல்படுவதால் எங்களுக்கு எந்தவித ஆட்சேபனையும் இல்லை. மாறாக, இது எங்களுக்கு முழுமையான மகிழ்ச்சியையும் நிலையான வாழ்வாதாரத்தையும் வழங்குகிறது. எனவே இந்த கல்குவாரியை நாங்கள் முழுமையாக வரவேற்கின்றோம். நன்றி, வணக்கம்.

31. **திரு.செந்தில்குமார்**, பாடாலூர்

அனைவருக்கும் வணக்கம். இந்த கல்குவாரி வருவதால் அனைவருக்கும் மகிழ்ச்சி ஏற்படுகிறது என்பது உண்மைதான். இது கட்டுமானப் பொருட்கள் உள்ளிட்ட பல தேவைகளுக்கு பயன்படுகிறது. அதே நேரத்தில், அருகில் விவசாயம் செய்து வரும் மக்களுக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாத வகையில் நிர்ணயிக்கப்பட்ட அளவிற்குள் மட்டுமே ஆழம் தோண்டி, உரிய வேலி அமைத்து மிகுந்த கவனத்துடன் குவாரி செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். மேலும், பைபாஸ் சாலையில் கல் மற்றும் எம்-சாண்ட் ஏற்றிச் செல்லும் வாகனங்கள் செல்லும் போது, பின்னால் வரும் இருசக்கர வாகன ஓட்டுநர்களுக்கு தூசி மற்றும் கற்கள் பட்டு கண்களுக்கு பாதிப்பு ஏற்படுவதும், கார்களில் ஜல்லி பட்டு கண்ணாடிகள் உடையும் நிலையும் உருவாகியுள்ளது. இதுகுறித்து புகார் தெரிவித்தால் அலட்சியமான பதில்கள் வழங்கப்படுகின்றன. எனவே, மாவட்ட நிர்வாகம் இதனை முறையாக ஆய்வு செய்து, பாதுகாப்பான முறையில் சரக்குகளை மூடி ஏற்றிச்

செல்லவும், பொதுமக்களுக்கு எந்தவித இடையூறும் இல்லாமல் நடவடிக்கை எடுக்கவும் உரிய வழிமுறைகள் வகுத்துத் தருமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

32. திரு.பாண்டியன், பாடாலூர்

நான் செங்கல், எம்-சாண்ட், பி-சாண்ட் மற்றும் ஜல்லி விற்பனை செய்து வருகிறேன். விவசாயம் நமக்கு உணவு வழங்கும் அடிப்படை ஆதாரம் என்பதால் அதை முழுமையாக பாதுகாக்க வேண்டும் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. அதே நேரத்தில், குடியிருக்கும் வீடுகளும் அத்தியாவசியமானவை. இன்று இயற்கை மணல் கிடைப்பதில் சிரமம் உள்ள நிலையில், எம்-சாண்ட், பி-சாண்ட், ஜல்லி போன்ற கட்டுமானப் பொருட்கள் அனைத்தும் குவாரிகளிலிருந்தே தயாரிக்கப்படுகின்றன. இந்த உற்பத்தி நமது பகுதிக்கு மட்டுமல்லாமல், சுற்றுவட்டாரத்தில் உள்ள கிட்டத்தட்ட பத்து மாவட்டங்களுக்கும் நமது ஊரிலிருந்தே வழங்கப்படுகிறது. இன்றைக்கு இந்த குவாரி செயல்பாடுகளால் ஏராளமான குடும்பங்கள் வாழ்வாதாரம் பெற்று வருகின்றன. குறிப்பாக பாடலூரை சுற்றியுள்ள ஓட்டுநர்கள், கடைக்காரர்கள் உள்ளிட்டவர்களில் சுமார் 90 சதவீதம் பேர் குவாரி தொழிலையே நம்பி வாழ்கிறார்கள். குவாரி இல்லையெனில் பாடாலூர் இல்லை. அனைவரும் முடிந்தவரை ஆதரவு வழங்க வேண்டும். அதே சமயம், விவசாயமும் பாதுகாக்கப்பட வேண்டும். விவசாயமும் வேண்டும், குவாரியும் வேண்டும் என்ற சமநிலையுடன் இரண்டுக்கும் உரிய ஆதரவு வழங்கப்பட வேண்டும். நன்றி, வணக்கம்.

33. திரு.மணிகண்டன், பாடாலூர்

நான் ஒரு ஓட்டுநராக பேசுகிறேன், ஓட்டுநர்களுக்கு உரிய சம்பளம் முறையாக வழங்கப்படுவதில்லை, நூறு ரூபாய் கொடுக்க வேண்டிய இடத்தில் ஐம்பது ரூபாய் கூட தர மறுக்கிறார்கள். இவ்வாறு தொடர்ந்து நடந்தால் நாங்கள் எப்படி வண்டி ஓட்டிப் பிழைப்பு நடத்த முடியும் ? ஐந்நூறு ரூபாய் கேட்டால் இருநூறு ரூபாய் மட்டுமே தரப்படுகின்றது. வேலை வழங்குபவர்களுக்கு அவர்களுடைய குடும்பச் சூழ்நிலை எப்படியிருந்தாலும், எங்களுடைய

குடும்பச் சூழ்நிலையும் அவர்கள் கருத்தில் கொள்ள வேண்டும் அல்லவா ? உள்ளூரில் வண்டி ஓட்டினாலே பல பிரச்சனைகள் ஏற்படுகின்றன. எல்லாருக்கும் குடும்பப் பொறுப்பு இருக்கிறது என்பதை நாங்கள் மறுப்பதில்லை, ஆனால் இந்த நிலையில் நாங்கள் என்ன செய்ய முடியும் என்பதே எங்களுடைய கேள்வி.

**மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்:**

தங்களுடைய கருத்துக்களை எழுத்து மூலமாக வழங்க விரும்புபவர்கள் உடனடியாக சமர்ப்பிக்கலாம் எனவும், இன்றைய கருத்துக் கேட்பு கூட்டத்தில் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள் தெரிவித்தார்கள்.

**மாவட்ட துணை ஆட்சியர்:**

கருத்து தெரிவிக்க விரும்பியவர்கள் அனைவருக்கும் போதிய வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதுடன், பலர் தங்களுடைய கருத்துகளை எழுத்து மூலமாகவும் சமர்ப்பித்துள்ளீர்கள். ஆகையால் நேரம் ஒதுக்கப்படவில்லை என்று எவரும் வருத்தப்பட வேண்டாம், ஏனெனில் இந்த கருத்துக் கேட்பு கூட்டத்தை இத்துடன் நிறைவு செய்ய உள்ளோம். இருப்பினும், யாரேனும் விடுபட்ட கருத்துகளை தெரிவிக்க விரும்பினால், அவற்றை மாசு கட்டுப்பாட்டு வாரிய அலுவலகத்தில் இன்று மாலை 5 மணிக்குள் எழுத்து மூலமாக வழங்கலாம். இக்கூட்டத்தில் பெறப்பட்ட அனைத்து கருத்துகளும் முறையாக பதிவு செய்யப்பட்டு, அதன் அடிப்படையில் அரசுக்கு உரிய அறிக்கை அனுப்பப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். கூட்டம் முழுவதும் அமைதியாக இருந்து ஒத்துழைப்பு வழங்கிய அனைத்து கிராம மக்களுக்கும், காவல்துறையினருக்கும் மற்றும் இதர அலுவலர்களுக்கும் எனது மனப்பூர்வமான நன்றியை தெரிவித்துக் கொண்டு, இந்த கருத்துக் கேட்பு கூட்டம் இத்துடன் நிறைவடைகிறது. நன்றி வணக்கம்.

**மாவட்ட ஆட்சியர் நேர்முக உதவியாளர் (பொது):** நீர் ஆதாரம் பெறுகிட பொதுமக்கள் அனைவரும் மரக்கன்றுகள் வளர்க்க வேண்டும் என்று கூறினார். பொதுமக்கள் தங்கள்

கருத்துகளை பதிவு செய்துள்ளீர்கள். இவை அனைத்தும் பதிவு செய்யப்பட்டு ஆடியோ மற்றும் வீடியோ மற்றும் மனுக்கள் அனைத்தும் சென்னைக்கு அனுப்பப்படும் என்று தெரிவித்தார்.

இதனையடுத்து பொதுமக்கள் எவரும் கருத்துகள் கூற முன்வராததால் மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள் கருத்துக் கேட்புக் கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி கூறி நிறைவு செய்தார்.

இணைப்பு :

1. பொது மக்கள் கருத்துக் கேட்புக் கூட்டத்தில் கலந்து கொண்டோரின் பெயர் பட்டியல் (13 பக்கங்கள்: 143 நபர்கள்)
2. திட்ட உரை விளக்கக்காட்சி
3. பொது மக்களின் கருத்துக் கேட்புக் கூட்டம் தொடர்பாக பெறப்பட்ட மனுக்கள் – 36 எண்கள்
4. பொது மக்கள் கருத்துக் கேட்புக் கூட்ட ஒளிப்பதிவு குறும்பதிவி.

18.02.24

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
பெரம்பலூர்

1F.2.24

மாவட்ட ஆட்சியர் நேர்முக
உதவியாளர் (பொது)/துணை ஆட்சியர்,
பெரம்பலூர் மாவட்டம்.